# 58. அடியவர்க்கடிமைநாம்

எழுசீர்க்கடிநெடிலடியாசிரியவிருத்தம்*

மறைமலி காழி யோனா வுக்கரையர் சேம
மதிகொண்ட நாவலூரர்
பொறைமலி சண்டி பூச னமிநந்தி முருகர்
புகழுடைத் தண்டியடிகள்
நிறைமதி நீல நக்கர் சோமாசி கலயர்
நேயவப் பூதியடிகள்
அறிவொடு நேடி நின்ற வருளார் குகேச
னடியவர்க் கடிமைநாமே.

---

* இவ்விருத்த அடி எண்சீர்க்கழிநெடிலடியாகாதோ? என்பார்க்கு 2–ல் "விறன் மிண்டனார்" 3–ல் "நெடுமாறனார்" என வருவனபோற் பல தொடர்கள் வருகின்றன வாகலின் அத்திறத்ததாகா தென்பது விடையாம்.

மறைமலி காழியோன் நாவுக்குஅரையர் சேம
மதிகொண்ட நாவலூரர்
பொறைமலி சண்டி பூசல் நமிநந்தி முருகர்
புகழுடைத் தண்டிஅடிகள்
நிறைமதி நீலநக்கர் சோமாசி கலயர்
நேய அப்பூதி அடிகள்
அறிவு ஒடு நேடி நின்ற அருள்ஆர் குகேசன்
அடியவர்க்கு அடிமை நாமே.

வேதம்மிகு திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், பேரின்ப அறிவுகொண்ட சுந்தரமூர்த்தி, பொறுமைமிகு சண்டிகேசுவரர், பூசலார், நமிநந்தி அடிகள், முருகர், புகழுடைய தண்டியடிகள், நிறையறிவுடைய நீலநக்கர், சோமாசிமாறர், கலயர், அன்புள்ள அப்பூதியடிகள் ஆகிய அறிவுடன் தேடி நின்ற அருள் நிறைந்த குகேசன் அடியவர்க்கு அடிமை நாமே. 1

**புகழ்த்துணை மானி செங்கட் சோழருயர் வாய**
**பொறையிடங் கழியர்கம்பர்**
**புகழ்க்கழற் சிங்கர் தூய நேசர்மெய்ப் பொருளர்**
**புகழ்ச்சோழன் மலையனொண்மை**
**திகழ்சிறப் புலிகு றும்பர் கணநாதர் திவ்விய**
**திருமூலர் விறன்மிண்டனார்**
**அகமதி னேடி நின்ற வருளார் குகேச**
**னடியவர்க் கடிமைநாமே.**

புகழ்த் துணை மானி செங்கட்சோழர் உயர்வுஆய
பொறை இடங்கழியர் கம்பர்
புகழ்க் கழற்சிங்கர் தூயநேசர் மெய்ப்பொருளர்
புகழ்ச் சோழன் மலையன் ஒண்மை
திகழ் சிறப்புலி குறும்பர் கணநாதர் திவ்விய
திருமூலர் விறல் மிண்டனார்
அகம் அதில் நேடி நின்ற அருள் ஆர் குகேசன்
அடியவர்க்கு அடிமை நாமே.

புகழ்த்துணையார், மங்கையர்க்கரசியார், செங்கட்சோழனார், மேலான பொறுமையுடைய இடங்கழியார், கலிக்கம்பர், புகழுடைய

2. **மலையன்** = சேரமானாயனார்.

காடவர்கோன் கழற்சிங்கனார், தூய அன்புடைய நேசர், மெய்ப்பொருளார், புகழ்ச் சோழனார், சேரமான் பெருமானார், சிறப்புலியார், பெருமிழலைக் குறும்பர், கணநாதர், அழகிய திருமூலர், விறல்மிண்டனார், முதலியோர் உள்ளத்தில் தேடி நின்ற அருள் நிறைந்த குகேசன் அடியவர்க்கு அடிமை நாமே. 2

**நரசிங்க முனையர் மூர்த்தி யேனாதி கலியர்**
**நலனின்ற நெடுமாறனார்**
**வரம்விஞ்சு சடையர் கூற்ற ரமர்நீதி யன்பின்**
**மதர்சேரை யடிகள்கோனார்**
**பரம்விஞ்சு சத்தி மூர்க்க ரானாய ருருத்ர**
**பசுபதிப் பெயரர்பரிவால்**
**அரனென்று நேடி நின்ற வருளார் குகேச**
**னடியவர்க் கடிமைநாமே.**

*நரசிங்க முனையர் மூர்த்தி ஏனாதி கலியர்*
*நலன் நின்ற நெடுமாறனார்*
*வரம் விஞ்சு சடையர் கூற்றர் அமர்நீதி அன்பின்*
*மதர் சேர்ஐ அடிகள் கோனார்*
*பரம்விஞ்சு சத்தி மூர்க்கர் ஆனாயர் உருத்ர*
*பசுபதிப் பெயரர் பரிவு ஆல்*
*அரன் என்று நேடி நின்ற அருள் ஆர் குகேசன்*
*அடியவர்க்கு அடிமை நாமே.*

நரசிங்கமுனையரையர், மூர்த்தியார், ஏனாதியார், கலியர், வரம்மிகு சடையர், கூற்றுவர், அமர்நீதியார், அன்பு மிகுந்த ஐயடிகள் காடவர் கோனார், மேன்மைமிகு சத்தியார், மூர்க்கர், ஆனாயர், உருத்திர பசுபதியார் முதலியோர் அன்பினால் சிவபெருமான் என்று தேடி நின்ற அருள் நிறைந்த குகேசன் அடியவர்க்கு அடிமை நாமே. 3

**இயற்பகை நாளைப் போவார் வாயில்லார் மாற**
**ரிசைஞானி கண்ணப்பனார்**
**தயைப்புகழ் திருக்கு றிப்பர் கலிக்காமர் காரி**
**தாயரருள் கொள்கோட்புலி**

**கயற்கணம் பேயர் நாகை யதிபத்தர் மானக்**
**கஞ்சாற ரெறிபத்தனார்**
**அயிர்ப்பற நேடிநின்ற வருளார் குகேச**
**னடியவர்க் கடிமைநாமே.**

இயற்பகை நாளைப் போவார் வாய்இல்லார் மாறர்
இசை ஞானி கண்ணப்பனார்
தயைப் புகழ் திருக்குறிப்பர் கலிக்காமர் காரி
தாயர் அருள் கொள் கோட்புலி
கயல்கணம் பேயர் நாகை அதிபத்தர் மானக்
கஞ்சாறர் எறிபத்தனார்
அயிர்ப்புஅற நேடி நின்ற அருள் ஆர் குகேசன்
அடியவர்க்கு அடிமை நாமே.

இயற்பகையார், திருநாளைப் போவார், வாயிலார், சோமாசி மாறனார், இசைஞானியார், கண்ணப்பனார், அன்புடைய புகழுக்குரிய திருக்குறிப்புத் தொண்டனார், கலிக்காமர், காரியார், அரிவாட்டாயர், அருள்கொண்ட கோட்புலியார், கயல்மீன்போலும் கண்களுடைய காரைக்கால் அம்மையார், நாகையைச் சேர்ந்த அதிபத்தர், மானக்கஞ்சாறர், எறிபத்தனார் முதலியோர் ஐயம் அறத் தேடி நின்ற அருள்நிறைந்த குகேசன் அடியவர்க்கு அடிமை நாமே. 4

**செருத்துணை சிறுத்தொண் டண்ணல் கிழநீக்கு நல்ல**
**திருநீல கண்டரருளே**
**பெருத்திட விளங்கு தண்டி லேவல்ல பாணர்**
**பிழையறு குலச்சிறைநெடுந்**
**தருக்குறு கணம்பு லார்மா முனையடுவா ரேசில்**
**சாக்கிய ருயர்ந்தவன்பால்**
**அரிப்பற நேடிநின்ற வருளார் குகேச**
**னடியவர்க் கடிமைநாமே.**

செருத்துணை சிறுத்தொண்டு அண்ணல் கிழநீக்கு நல்ல
திருநீலகண்டர் அருளே
பெருத்திட விளங்கு தண்டிலேவல்ல பாணர்
பிழை அறு குலச்சிறை நெடுந்

5. அரிப்பு = குற்றம்; சூ – நிகண்டு காண்க

தருக்குஉறு கணம்புலார் மாமுனை அடுவார் ஏசுஇல்
சாக்கியர் உயர்ந்த அன்பால்
அரிப்புஅற நேடிநின்ற அருள்ஆர் குகேசன்
அடியவர்க்கு அடிமை நாமே.

செருத்துணையார், சிறுத்தொண்டர் என்னும் பெரியார், முதுமை நீங்கிய நல்ல திருநீலகண்டக் குயவனார், அருள் மிகுந்திருக்க விளங்கும் திருநீலகண்ட யாழ்ப்பாணர், குற்றமற்ற குலச்சிறையார், பெருஞ்செருக்குடைய கணம்புல்லர், சிறந்த முனை அடுவார், கெடுதல் இல்லாத சாக்கியர், உயர்ந்த அன்பினால் குற்றம் அறத் தேடி நின்ற அருள் நிறைந்த குகேசன் அடியவர்க்கு அடிமை நாமே. 5

**பரமனைப் பாடு வாரெந் நாளும் புகழ்ந்து**
**பணிபவர் மனத்தையவனில்**
**மருவவைப் பவர்க ளாரூ ருதயஞ்செய் யன்பர்**
**வழுதற்ற புலவரறவோர்**
**முருகுடை மேனி தீண்டு பவர்சாரு மடிகண்**
**முழுநீறு பூசுமுனிவர்**
**அரணொடு நேடி நின்ற வருளார் குசேக**
**னடியவர்க் கடிமைநாமே.**

பரமனைப் பாடுவார் எந்நாளும் புகழ்ந்து
பணிபவர் மனத்தை அவனில்
மருவ வைப்பவர்கள் ஆரூர் உதயம் செய் அன்பர்
வழுது அற்ற புலவர் அறவோர்
முருகு உடை மேனி தீண்டுபவர் சாரும் அடிகள்
முழுநீறு பூசு முனிவர்
அரண்ஒடு நேடி நின்று அருள் ஆர்குகேசன்
அடியவர்க்கு அடிமை நாமே.

பரமனையே பாடுவார், எந்நாளும் புகழ்ந்து பத்தராய்ப் பணிவார், மனத்தை இறைவன்பால் வைத்தவர் எனப்படும் சித்தத்தைச் சிவன்பால் வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார், பொய்யிலாப் புலவர்கள், அறவோர்கள், அழகுடைய மேனியைத் தீண்டுபவர் என்று கூறப்படும் முப்பொழுதும் திருமேனி தீண்டுவார், அப்பாலும் அடிசார்ந்தார்,

6. **வழுது** = பொய்; **நிகண்டுகள்** காண்க.

முழுநீறு பூசிய முனிவர் வலிமையுடன் தேடி நின்ற அருள் நிறைந்த குகேசன் அடியவர்க்கு அடிமை நாமே. 6

**சேந்தனார் கண்ட ராதித் தரஞ்சேதி ராயர்**
**திருவாலி யமுதரமுதம்**
**மாந்துபுரு டோத்த மப்பே ராளர்கரு வூரர்**
**வாய்மைவே ணாடரார்வந்**
**தீந்தகா டவர்கள் கோனற் றிருவாத வூரர்**
**திருமாளி கைத்தேவரொன்**
**றாந்தனையு நேடி நின்ற வருளார் குகேச**
**னடியவர்க் கடிமைநாமே.**

சேந்தனார் கண்டராதித்தர் அம் சேதிராயர்
திருவாலியமுதர் அமுதம்
மாந்து புருடோத்தமப் பேராளர் கருவூரர்
வாய்மை வேணாடர் ஆர்வம்
தீந்தகாடவர்கள்கோன் நல்திருவாதவூரர்
திருமாளிகைத் தேவர் ஒன்று
ஆம்தனையும் நேடிநின்ற அருள்ஆர் குகேசன்
அடியவர்க்கு அடிமை நாமே.

சேந்தனார், கண்டராதித்தர், அழகிய சேதிராயர், திருவாலியமுதர், அமுதம் உண்ணும் புருடோத்தமர் என்னும் பெரியார், கருவூர்ச் சித்தர், வாய்மை பேசும் வேணாடர், ஆசையற்ற காடவர்கள்கோன், நல்ல திருவாதவூரடிகள், திருமாளிகைத் தேவர், பெருமானைச் சேரும்வரையும் தேடி நின்றவர் ஆவர். இந்த அருள் நிறைந்த குகேசன் அடியவர்களுக்கு அடிமை நாமே. 7

**பிடித்திடு தண்டு குந்தஞ் சுரிகைமுச் சூலம்**
**பிரபாவ மோடியங்க**
**மடக்கொடி வள்ளி பங்கன் மணநீ றணிந்து**
**மயிலேறு மெங்கள்பரமன்**
**நடித்திடி னகத்தி னுள்ளே நடுவான சண்ட**
**னடமாட வருவதேதென்**
**றடிக்கடி நேடி நின்ற வருளார் குகேச**
**னடியவர்க் கடிமைநாமே.**

8. **வள்ளிபங்கன்** = வள்ளிவிருப்பன். பங்கம் = விருப்பம்; **நிகண்டு விச்வமேதிநி** காண்க.

பிடித்திடு தண்டு குந்தம் சுரிகை முச்சூலம்
பிரபாவம் ஒடு இயங்க
மடக்கொடி வள்ளிபங்கன் மணநீறு அணிந்து
மயில் ஏறும் எங்கள் பரமன்
நடித்திடின் அகத்தின் உள்ளே நடுஆன சண்டன்
நடம் ஆட வருவது ஏது என்று
அடிக்கடி நேடிநின்ற அருள்ஆர் குகேசன்
அடியவர்க்கு அடிமை நாமே.

திருக்கையில் பிடித்துள்ள தண்டாயுதம், குந்தம், உடைவாள், முச்சூலம் ஒளி வீசிக்கொண்டிருக்க, இளங்கொடி போன்ற வள்ளியம்மையின் விருப்பன், மணம் கமழும் திருநீறு அணிந்து மயில்வாகனம் ஏறும் எங்கள் கடவுள் உள்ளத்தில் நடம் செய்வானாயின், நடுநிலை வகிப்பவன் என்று கூறுப்படும் இயமன் நம் பக்கம் நடமாட்டம் செய்வது ஏது என்று உணர்ந்து, அடிக்கடி தேடி நின்ற அருள் நிறைந்த குகேசன் அடியவர்க்கு அடிமை நாமே. 8

**முனைதருஞ் சூர னோடன் றமர்செய்து கொண்ட**
**முருகவே ளெங்கள்பரமன்**
**பனியுறு கடம்பு நீல முடிமீ தணிந்து**
**பலகாலு நெஞ்சினடுவே**
**கனைகழல் சிலம்ப நாட கஞ்செய்யின் வந்து**
**கவிபாத கங்களிலையென்**
**றனுதின நேடி நின்ற வருளார் குகேச**
**னடியவர்க் கடிமைநாமே.**

முனைதரும் சூரனோடு அன்று அமர் செய்து கொண்ட
முருகவேள் எங்கள் பரமன்
பனிஉறு கடம்புநீல முடிமீது அணிந்து
பலகாலும் நெஞ்சின் நடுவே
கனைகழல் சிலம்ப நாடகம் செய்யின் வந்து
கவிபாதகங்கள் இலை என்று
அனுதினம் நேடி நின்ற அருள்ஆர் குகேசன்
அடியவர்க்கு அடிமை நாமே.

பகைகொண்ட சூரபன்மனுடன் அன்று போர் செய்த முருகவேள் ஆன எங்கள் இறைவன் குளிர்ச்சி பொருந்திய

கடம்புமலர் மாலையைக் கரிய முடிமீது அணிந்து, பல சமயமும் உள்ளத்தின் நடுவில் ஒலிக்கும் கழல் அசைய நடனம் செய்யின் வந்து சேருமெனிற் குற்றங்கள் இல்லை என்று, அனுதினம் தேடி நின்ற அருள் நிறைந்த குகேசன் அடியவர்க்கு அடிமை நாமே. 9

**கொடுநிழ லவிய வந்த குறையோவ வின்பு**
**குறையாத பேறுமுறவே**
**வடுவறு கவிகள் சொன்ன வருணகிரி யென்று**
**மறவாது கொண்டசரணம்**
**குடிகொளவு ளஞ்சி யஞ்சி யிவைபாடு கின்ற**
**குமரகுரு தாசனாளும்**
**அடியடைய நேடி நிற்கு மருளார் குகேச**
**னடியவர்க் கடிமைநாமே.**

*கொடுநிழல் அவிய வந்த குறை ஓவ இன்பு*
*குறையாத பேறும் உறவே*
*வடுவுஅறு கவிகள் சொன்ன அருணகிரி என்று*
*மறவாது கொண்ட சரணம்*
*குடிகொள உள் அஞ்சி அஞ்சி இவைபாடுகின்ற*
*குமர குருதாசன் நாளும்*
*அடி அடைய நேடி நிற்கும் அருள் ஆர் குகேசன்*
*அடியவர்க்கு அடிமை நாமே.*

பிறவி என்னும் கொடிய நோய் அழியவும், வந்த குற்றங்கள் ஒழியவும், இன்பம் குறையாத பேறு பெறவும், குற்றமில்லாத கவிகள் பாடியருளிய அருணகிரிநாதர் என்றும் மறவாமல் கொண்ட திருவடிகள் குடிகொள்ள, மனத்தில் அஞ்சி அஞ்சி இவற்றைப் பாடுகின்ற குமரகுருதாசன், நாள்தோறும் திருவடியை அடையத் தேடி நிற்கும் அருள் நிறைந்த குகேசன் அடியவர்க்கு அடிமை நாமே. 10